குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் - 1, ஒசூர்

முன்னிலை திரு.R.நரசிம்ம மூர்த்தி எல்எல்.பி.,

2026 ஆம் ஆண்டு மே மாதம் 14-ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்:90/2023**

**CNR No. TNKI06-00012282023**

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>பேரிகை காவல் நிலையம்,<br>குற்ற எண். 112/2019 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | 1. அனுமந்தப்பா த/பெ.கங்கப்பா<br>2. கங்கப்பா த/பெ.சந்திரப்பா |
| குற்றப்பிரிவுகள் | இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 |
| குற்றம் வனையப்பட்டது | 1ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரியின் மீது 341, 324 உ/இ 34 மற்றும் 326 |
| **வழக்கின் சுருக்கம்** | |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 14.05.2019 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 22.06.2023 |
| குவிமுச பிரிவுகள் 240, 246, 252 ன் | 12.09.2024 |

| | |
|---|---|
| பிரகாரம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | |
| பல்வகை மனு அதன் முடிவு | - |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | 1) அ.சா.1 மு.வி. 12.03.2026<br>கு.வி. 12.03.2026<br>2) அ.சா.2 மு.வி. 12.03 2026<br>கு.வி. 12.03 2026<br>3) அ.சா.3 மு.வி. 12.03 2026<br>கு.வி. 12.03 2026<br>4) அ.சா.4 மு.வி. 17.03 2026<br>கு.வி. 17.03.2026<br>5) அ.சா.5 மு.வி. 11,05,2026<br>கு.வி. 11.05.2026 |
| கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 13.05.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம். மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம், | - |
| மேல்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | - |
| தீர்மானம் மற்றும் முடிவு | 1. முடிவில் திரண்ட பயனிலிருந்தும் 1ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 341, 324 |

| | |
|---|---|
| | மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரி 341, 324 உ/இ 34 மற்றும் 326ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து 1, 2ம் எதிரிகளை குவிமுச பிரிவு 248 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை. |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக இன்று 13.05.2026 -ம் தேதி வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.V.கனிமொழி, அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.லட்சுமிநாக ஷங்கர் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு ஆவணங்களை பரீசிலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## தீ ர் ப் பு ரை

1) கடந்த 12.05.2019 -ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு பேரிகை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட குடிசாதனப்பள்ளி கிராமத்தில் மட்டன் வெங்கடேஷ் என்பவரின் வீட்டின் பின்புறம் சாட்சிகள் பாலாஜி மற்றும் மட்டன் வேங்கடேஷ் ஆகிய இருவரும் நடந்து சென்றுகொண்டிருந்தபோது 1 மற்றும் 2ம் எதிரிகள் இருவரும் சேர்ந்து நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியை முறையற்ற முறையில் தடுத்து நிறுத்தி, மேலும் 1ம் எதிரி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியின் பின்பக்க தலையில் தாக்கி இரத்தகாயமாக சொற்பகாயம் ஏற்படுத்தி, 2ம் எதிரி கங்கப்பா நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியிடம் ஏண்டா நான் கொடுத்த 600 ரூபாய் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்று கேட்டதற்கு நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜி இப்போது

என்னிடம் பணம் இல்லை, நீ ஏண்டா கண்ட இடத்திலெல்லாம் பணம் கேட்கிறாய் என்று கேட்டதற்கு 2ம் எதிரி அருகில் இருந்த இரும்பு கம்பியை எடுத்து நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியின் வலதுகை, வலதுகால் மற்றும் தொடை ஆகிய இடங்களில் தாக்கி இரத்தகாயமாக கொடுங்காயம் ஏற்படுத்தியதற்காக எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326-ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக பேரிகை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிகளுக்கு, இந்நீதிமன்றத்திலிருந்து குவிமுச பிரிவு 204 பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் எதிரிகள் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச 207 பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டன.

3) இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், இந்நீதிமன்றத்தால் குவிமுச 251 (1) பிரிவின்படி 1ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரியின் மீது 341, 324 உ/இ 34 மற்றும் 326ன் கீழ் குற்றசாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை, பொய் வழக்கு என்று மறுத்துக் கூறினார்கள். எனவே, இருதரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரான பாலாஜி இறந்துவிட்டதால் வழக்குச் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சியான வெங்கடேஷ் அ.சா.1 ஆகவும், வழக்குச்சம்பவத்தைக் கேட்டறிந்த மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 ஆகவும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.V.பிரபாகரன் என்பவர் அ.சா.5 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பு சாட்சிப்பட்டியலில் கண்ட 1, 3 மற்றும் 8 ஆகியோர்கள் இறந்துவிட்டதாலும் மேலும் 6, 7, 10 மற்றும் 11 ஆகியோர்களை விசாரணை செய்வதிலிருந்து இவ்வழக்கிலிருந்து விளக்களித்து அரசு தரப்பில் மேலொப்பம் செய்யப்பட்டு மேற்படி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

5) மேலும் அரசு தரப்பில் பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா-ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து, குவிமுச பிரிவு 313 (1) (b) ன் படி வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சியம் என அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சியம் யாருமில்லை என்று கூறியதால், எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எனவே எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக பரிசிலீக்கப்பட்டன.

8) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத்தரப்பில் 1ம் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 341, 324 உ/இ 34 மற்றும் 326-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா ? என்பதே ஆகும்.

9) **தீர்வு :-**

9 (i) அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரும், பாதிக்கப்பட்டவருமான பாலாஜி இறந்துவிட்ட நிலையிலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 மற்றும் வழக்குச்சம்பவத்தைக் கேட்டறிந்த சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3, பார்வைமகஜர் சாட்சியான அ.சா.4 ஆகியோர்களும் அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளபோதும், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்துள்ள சிறப்பு காவல் உதவி ஆய்வாளரான அ.சா.5 இவ்வழக்கின் நிகழ்நிலைப்புகார்தாரரால் அளிக்கப்பட்ட புகாரைப் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை அதிகாரியால் சாட்சிய சான்றாவணங்கள் சேகரித்து குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.5ன் சாட்சியத்தை அரசு சான்றாவணங்களான அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 ஆகியவை ஒத்திசைந்து அமைந்துள்ளது என்றும், இவ்வழக்குச் சம்பவமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகையால் 1ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரியின் மீது 341, 324 உ/இ 34 மற்றும்

326ன் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கவேண்டுமென்று வாதிட்டார்.

9 (ii) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில், நிகழ்நிலைப்புகார்தாரரும், பாதிக்கப்பட்டவருமான பாலாஜி சாட்சியமளிக்காமல் இறந்துவிட்டார் என்றும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரிகளைத் தெரியும் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கும்போது வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியமளித்துள்ளார் என்றும், அதே போல் வழக்குச்சம்பவத்தைக் கேட்டறிந்த சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரிகள் தங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 8 மணிக்கு தங்கள் கிராமத்தில் இருந்தபோது நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜி தனக்கு போன் செய்து தான் அதிகமாக குடித்து போதை அதிகமாகிவிட்டதால் தன்னை அழைத்துச் சென்று வீட்டில் விடும்படி கூறியதாகவும், தான் ஊரின் ஓரமாக உள்ள தைலத்தோப்பிற்குச் சென்று பார்த்தபோது நிகழ்நிலைப்புகார்தாரர்

பாலாஜிக்கு காயம் ஏற்பட்டிருந்ததால் அவரை தான் தன்னுடைய பைக்கில் பேரிகை அசோகா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சேர்த்தேன் என்றும், தன்னை காவல் துறையினர் விசாரிக்கவில்லையென்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார் என்றும், மேலும் மற்றொரு கேட்டறிந்த சாட்சியான அ.சா.3 வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் காவல் துறையினர் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேலும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த கையெழுத்தை எதற்காக எப்போது கையெழுத்து செய்தேன் என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், காவல் துறையினர் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரான அ.சா.5ன் சாட்சியம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய போதுமானது அல்ல என்றும், எதிரிதான் மேற்குறிப்பிட்ட குற்றச்செயல்களை செய்தார் என்பதை நிரூபிக்கக்கூடிய நம்பதகுந்த சாட்சிகள் எதையும் அரசு தரப்பில் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லையென்றும்,

இவ்வழக்கில் எதிரிகளால் பாதிக்கப்பட்டதாக சொல்லும் பொருள் எதையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே அரசு தரப்பில், 1ம் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 341, 324 உ/இ 34 மற்றும் 326ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கவேண்டுமென்றும் வாதிட்டார்.

9 (iii) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு வழக்கின்படி கடந்த 12.05.2019 -ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு பேரிகை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட குடிசாதனப்பள்ளி கிராமத்தில் மட்டன் வெங்கடேஷ் என்பவரின் வீட்டின் பின்புறம் சாட்சிகள் பாலாஜி மற்றும் மட்டன் வேங்கடேஷ் ஆகிய இருவரும் நடந்து சென்றுகொண்டிருந்தபோது 1 மற்றும் 2ம் எதிரிகள் இருவரும் சேர்ந்து நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியை முறையற்ற முறையில் தடுத்து நிறுத்தி, 1ம் எதிரி நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியை கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் பின்பக்க தலையில் தாக்கி இரத்தகாயமாக சொற்பகாயம்

ஏற்படுத்தியதற்காகவும், 2ம் எதிரி கங்கப்பா நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியிடம் ஏண்டா நான் கொடுத்த 600 ரூபாய் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்று கேட்டதற்கு நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜி இப்போது என்னிடம் பணம் இல்லை நீ ஏண்டா கண்ட இடத்திலெல்லாம் பணம் கேட்கிறாய் என்று கேட்டதற்கு 2ம் எதிரி அருகில் இருந்த இரும்பு கம்பியை எடுத்து நிகழ்நிலைப்புகார்தாரர் பாலாஜியின் வலதுகை, வலதுகால் மற்றும் தொடை ஆகிய இடங்களில் தாக்கி இரத்தகாயமாக கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும் 1ம் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 341, 324 உ/இ 34 மற்றும் 326-ன் படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

9 (iv) இவ்வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரும் பாதிக்கப்பட்டவருமான பாலாஜி என்பவர் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார். எனவே நிகழ்நிலைப்புகார்தாரர் விசாரணை செயயப்படவில்லை. இந்நிலையில் வழக்குச் சம்பவத்தின் போது நிகழ்நிலைப்புகார்தாரருடன் நடந்து சென்றதாகவும், கண்ணுற்ற சாட்சியாகவும் சொல்லப்படும் வெங்கடேசன் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது தனது சாட்சியத்தில், தனக்கு வழக்குச் சம்பவம் குறித்து எதுவும்

தெரியாது என்றும், காவல் துறையினர் தன்னை விசாரிக்கவில்லையென்றும், அரசுக்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் இவ்வழக்கின் வழக்குச்சம்பவத்தைக் கேட்டறிந்த மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 ஆகியோர்களும் தங்களது சாட்சியத்தில் வழக்குப்பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லையென்றும் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் பிறழ்சாட்சியமாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ளபோதும், அவர்களிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மாறாக அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் தங்களது குறுக்கு விசாரணையின்போது அரசு தரப்பு வழக்கை முற்றிலும் மறுத்து சாட்சியமளித்துள்ளார்கள். எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியங்கள் நிரூபணம்செய்யவில்லையென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9 (v) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்காக அரசு தரப்பில் பேரிகை காவல் நிலைய தற்போதைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் அ.சா.5 ஆக விசாரித்து அவர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். இருப்பினும் அ.சா.5ன் சாட்சியத்தை அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களின் சாட்சியங்கள் பொய்ப்பிப்பதால் அ.சா.5ன் சாட்சியம் நம்பத்தகுந்த போதுமான சாட்சியமில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிய சாண்றாவணங்களை கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லையென்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகையால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக பாவித்து 1ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரியின் மீது 341. 324 உ/இ 34 மற்றும் 326ன் கீழ் குற்றாவாளிகள் அல்ல என்றே இந்நீதிமன்றம் இவ்வழக்கில் எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

9 (vi) முடிவில் திரண்ட பயனிலிருந்தும் 1ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 341, 324 மற்றும் 326 உ/இ 34 மற்றும் 2ம் எதிரி 341, 324 உ/இ 34 மற்றும் 326ன் கீழும்

குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து 1, 2ம் எதிரிகளை குவிமுச பிரிவு **248 (1)** ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மே மாதம் 14-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.14 18:37:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

ஒசூர்

**குறிப்பு**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3). இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

பின் அட்டவணை

1. குற்ற முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் பட்டியல்

| வ. எண் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| 1. | திரு. வெங்கடேசப்பா | அ.சா.1 |
| 2. | திரு.முனியப்பா | அ.சா.2 |
| 3. | திரு.தேவராஜ் | அ.சா.3 |
| 4. | திரு.கோபாலாச்சாரி | அ.சா.4 |
| 5. | திரு.V.பிரபாகரன் | அ.சா.5 |

2). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்

| வ. எண் | ஆவண விவரம் | சான்றாவண வரிசை |
|---|---|---|
| 1. | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையெழுத்து | அ.சா.ஆ.1 |
| 2. | புகார் வாக்குமூலம் | அ.சா.ஆ.2 |
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.ஆ.3 |
| 4. | மாதிரி வரைபடம் | அ.சா.ஆ.4 |
| 5. | பார்வை மகஜர் | அ.சா.ஆ.5 |
| 6. | காயச்சான்று | அ.சா.ஆ.6 |
| 7. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.ஆ.7 |

3). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்று பொருட்கள் பட்டியல்

| வ.எண் | சான்று பொருள் விவரம் | சான்று பொருள் வரிசை |
|---|---|---|
| - | - | - |

4). எதிரிகள் தரப்பு சாட்சிகள் பட்டியல்

| வ.எண் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| - | - | - |

5). எதிரிகள் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்

| வ.எண் | தேதி | ஆவண விவரம் | சான்றாவண வரிசை | தன்மை |
|---|---|---|---|---|
| - | - | - | - | - |

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.14 18:37:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

ஒசூர்

**நகல்:** மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.